Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

HELLO Mirror MADRAS
hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 6 Pages | Friday, April 29, 2022 | Rs.2/- | ISSUE - 289

# PM hosts Sikh delegation at his residence in New Delhi



Chennai, April 29 2022: The Prime Minister, Shri Narendra Modi today hosted a Sikh delegation at 7 Lok Kalyan Marg, the official residence of the Prime Minister. The group included people from different walks of life. Union Minister, Shri Hardeep Singh Puri was among those present on the occasion.

Speaking on the occasion, the Prime Minister recalled his long association with the Sikh community. "Going to Gurudwaras, spending time in 'sewa', getting langar, staying at the homes of Sikh families has been a part of my life. The feet of Sikh saints keep falling from time to time in the Prime Minister's residence here. I keep getting the good fortune of their company", the Prime Minister said. The Prime Minister also recalled his visits to the places of Sikh heritage all over the world during his visits abroad.

Prime Minister Narendra Modi said "our Gurus have taught us courage and service. The people of India have gone to different parts of the world without any resources and achieved success through their labour. This is the spirit of New India today too", he said.

Reiterating his appreciation for the mood of new India, the Prime Minister said New India is scaling new dimensions and is leaving its mark on the whole world. Period of Corona epidemic is the biggest example of this. At the beginning of the epidemic, people with old mindset were expressing concerns about India. But now, people are giving the example of India for its handling of the pandemic. Earlier concerns were being voiced over the enormity of population of India and many were doubtful about vaccine for Indians. But today India has emerged as the biggest vaccine maker. "You will also be proud to hear that 99 percent of the vaccination has been done through our own Made in India Vaccines",he said.

The Prime Minister said in this difficult period, India has emerged as one of the world's largest start up ecosystems. "The number of our unicorns is constantly increasing. This growing stature and credibility of India provides maximum satisfaction and pride to our diaspora", he added. The Prime Minister said "I have always considered our Indian diaspora as Rashtrdoot of India. All of you are the strong voice and lofty identity of Maa Bharati abroad." He said even diaspora feels proud about the strides of growth that India is taking. "Wherever we are in the world, 'India First' needs to be our primary faith, he added.

Bowing to the great contribution and sacrifices of the Gurus, the Prime Minister recalled how Guru Nanak Dev ji awakened the consciousness of the entire nation and bought the nation out of darkness and took it on the path of light. He said that the Gurus travelled all over India and everywhere there are their signs and inspirations. They are revered and there is faith in them everywhere. The Prime Minister said that the feet of Gurus sanctified this great land and inspired its people. Sikh tradition is a living tradition of 'Ek Bharat Shreshth Bharat', he said. Prime Minister Narendra Modi expressed the county's gratitude for Sikh Community's contribution during the freedom struggle and after Independence. He said that 'Sikh community is synonymous with the courage, prowess and hard work of the country'.

The Prime Minister once again elaborated on his vision of India's freedom struggle. He said that this struggle is not confined to a limited period but is a manifestation of thousands of years of consciousness, ideals, spiritual values and 'tapasya'.

The Prime Minister expressed happiness on the good fortune of being associated with the landmark events like Guru Teg Bahadur's 400th Prakash Purab, Guru Nanak Devji's 550th Prakash Purab and Guru Gobind Singh Ji's 350th Prakash Purab. He also said that events like construction of Kartarpur Corridor, making langars tax free, FCRA permission for Harmandir Sahib and improving infrastructure and cleanliness around Gurudwaras have been done in the tenure of this government.

The Prime Minister referred to the Gurus' emphasis on duty and linked it with the same emphasis on sense of duty in the Amrit Kaal and said mantra of Sabka Saath, Sabka Vikas, Sabka Vishwas and Sabka Prayas is an evocation of this spirit. He said this sense of duty is important not only for the present but also for our future generations. He praised the Sikh community for being always active for the causes of environment, nutrition, and protection of cultural values. He concluded by requesting the gathering to contribute in the recently launched campaign for Amrit Sarovars.

# 'Food Processing Week 2.0' organized by the Ministry of Food Processing Industries, under the 'Kisan Bhagidari, Prathmikta Hamari' Campaign by the M/o Agriculture & Farmers Welfare under 'Azadi Ka Amrit Mahotsav'



Chennai, April 29 2022: To commemorate 75 years of India's independence, the Government of India is celebrating the 'Azadi Ka Amrit Mahotsav.' As a part of the celebration, Ministry of Food Processing Industries is organising 'Food Processing Week 2.0' from 25th to 30th April, 2022 under 'Kisan Bhagidari, Prathmikta Hamari' Campaign by Ministry of Agriculture & Farmers Welfare under the 'Azadi Ka Amrit Mahotsav'.

In this direction, Union Minister for M/o Food Processing Industries, Shri Pashupati Kumar Paras virtually inaugurated 75 (seventy five) food processing projects of Central Sector Scheme - Pradhan Mantri Kisan SAMPADA Yojana today in New Delhi.

The total cost of these projects is about Rs.1238 crores, and the Ministry has provided financial support through grant of Rs. 309 crores for these projects. These projects will provide direct and indirect employment to about 36,000 people and benefit about 4 lakh 63 thousand farmers.

The Ministry launched the 'Food Processing Week 2.0' on 25th April, 2022, through a social media campaign under which awareness about the schemes of the Ministry, the success story of the beneficiaries of the schemes of the Ministry were covered on social media throughout the week. Apart from this, ODOP workshop and exhibition on Processing and Value Addition of One District One Product is also being organized under PMFME scheme in many districts across the country.

While addressing the promoters, Union Minister for Food Processing Industries, Shri Pashupati Kumar Paras thanked the promoters of these projects for developing state-of-the-art processing facilities, which will prove to be a milestone in the development of the food processing sector and will greatly benefit the farmers, producers, processors and consumers of the surrounding areas. He also mentioned that as a result of growing urbanization and middle class, there is a constant demand for nutritious processed foods and food processing has the potential to transform India's rural economy.

# PFCI to distribute 2000 Water Bowls to quench the thirst of needy Animals and Birds, this summer

## Invites people to participate in #WaterBowlChallenge2022



Chennai, April 29 2022: People For Cattle in India (PFCI), an NGO formed by the animal Lovers in India, to promote the welfare of animals and prevent any form of cruelty against them. PFCI will launch this year's Water Bowl Challenge 2022 on 30th April 2022, 4PM at SPP Gardens, Maduravoyal.

Global warming has contributed to hotter summers and just like us, animals too suffer from parched throat, severe dehydration not to mention several diseases from drinking unclean dirty water if they do not have proper access to drinking water.

The intent of the Water Bowl Challenge is to encourage people to place water bowls outside their houses, terraces, balconies, gardens, offices, streets and wherever else possible in order to help the birds and animals quench their thirst anytime they need. To take up the water bowl challenge, one has to collect his/her water bowl, click a picture with an animal/bird drinking water from the bowl they had collected from PFCI and challenge 5 people to do the same. The participants have to use the hashtag #WaterBowlChallenge2022 when they post the pictures on social media. The 5 most creative entries will be qualified for surprise gifts from the PFCI Team.



To collect a Free PFCI Water Bowl, please sign up as soon as possible using the link https://tinyurl.com/PFCI-WaterBowl-2022 as its allotted on a first come first serve basis.

This year the campaign brand ambassador will be Ms.Ishwarya Menon, a celebrity actress who will inspire people to put out a bowl of water for the neighbourhood animals & birds. Clean access to water is a privilege for community animals that otherwise have to depend on unhealthy source of water to quench their thirst, which in turn can lead to diseases. Arun Prasanna, Founder of PFCI requests people to put out a bowl of water for animals to help them tide over these hot summer months.

PFCI has been distributing water bowls since 2014 & in 2021, had distributed 1500 bowls and this year intends to distribute 2000. In the past, The Water Bowl Challenge has witnessed celebrities, industrialist & bureaucrats participating and spreading awareness in the past few years. This year too, we expect a good participation from the animal lovers and general public alike. Together we can make a difference!

# Ministry of Tourism displays India's vast range of travel products and opportunities in Oman edition of the Incredible India Reconnect 2022 virtual roadshow

Chennai, April 29 2022: As India opens its borders post-pandemic, Ministry of Tourism, Government of India is organising a series of virtual roadshows with Indian Missions overseas as a means to reconnect with its existing partners and explore new ties and opportunities.

India's vast range of travel products and opportunities was on display on Tuesday at the Oman edition of the Incredible India Reconnect 2022 virtual roadshow.

The Incredible India Reconnect 2022 Virtual Roadshow started with opening remarks from Mr. Amit Narang, Ambassador of India to the Sultanate of Oman. He talked about India and Oman's bilateral relationships and how the same may be leveraged for the promotion of tourism.

It was followed by the remarks from Mr. G Kamala Rao Vardhana, Director General (Tourism), Ministry of Tourism, Mr. Rao discussed about the recovery of the tourism sector and how India was ready to open up its borders once again.

After this, a session was conducted by Mr. Sunil Dsouza, CEO, Travel Point who focused on India being a 365-day destination and stressed on pointers like formulating an annual events calendar based around festivals, transportation, security aspects and redressal mechanisms, halal foods, guide trainings, competitive pricing and seamless policies.

This session was followed by another insightful session from the representatives of IATO and ICPB who spoke about their respective organisations, India's USP, geography, products, its edge as a MICE tourism destination and showed 2 films highlighting the same. The event was attended by 244 participants.

The first Incredible India Reconnect event signalled the start of great efforts between the government and the market to encourage bilateral tourism by recognising the issues, challenges, and opportunities in an attempt to strengthen and build momentum on two-way growth phase.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935



## மளிகை கடையில் வேலை செய்யும் இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை 5 பேர் கைது



தஞ்சை, ஏப்ரல் 29, 2022: தஞ்சாவூர் அருகே தோழகிரிபட்டியில் 22 வயது இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட புகாரில் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

தஞ்சை அருகே உள்ள குலுங்குளம் சோழகிரிபட்டியை சேர்ந்த 22 வயது இளம்பெண் பிளஸ்-2 முடித்துவிட்டு தஞ்சையில் மளிகை கடையில் வேலை செய்து வருகிறார். இவர் வேலை முடிந்து கடையில் இருந்து தஞ்சை புது பஸ்நிலையம் நோக்கி நடத்தி சென்று கொண்டிருந்தார்.

அப்போது அருகில் உள்ள மேட்டுப்பட்டி பகுதியை சேர்ந்த கொடியரசன் என்ற வாலிபர் மோட்டார் சைக்கிளில் சென்று இளம்பெண்ணை மறித்து பேசினார். ஏற்கனவே அறிமுகமான இவர் மோட்டார் சைக்கிளில் வீட்டில் கொண்டு போய் விடுகிறேன் மோட்டார் சைக்கிளில் ஏறு என கூறியுள்ளார்.

இதற்கு இளம்பெண் மறுப்பு தெரிவித்ததார். இதனால் அவரது செல்போனை பறித்துக்கொண்டு மிரட்டினார். இதனால் பயந்து போன இளம்பெண் வேறு வழியின்றி மோட்டார் சைக்கிளில் ஏறியுள்ளார். பின்னர் இளம்பெண்ணின் வீட்டுக்கு செல்லும் வழியில் மேட்டுப்பட்டியை தாண்டியதும் கொடியரசன் மோட்டார் சைக்கிளை காட்டுப்பகுதிக்கு திருப்பி உள்ளார். இதனால் பயந்து போன இளம்பெண் சத்தம் போட்டுள்ளார்.

இருப்பினும் கொடியரசன் வலுக்கட்டாயமாக அங்குள்ள முந்திரி காட்டுக்கு இளம்பெண்ணை கடத்திச்சென்றார். அங்கு கொடியரசனின் நண்பர்களான சுகுமார், தமிழரசன், கண்ணன் ஆகிய 3 பேர் இருந்தனர். இதனால் அஞ்சி நடுங்கிய இளம்பெண் அங்கிருந்து தப்பிக்க முயன்றார். ஆனால் கொடியரசனும் அவரது நண்பர்கள் 4 பேரும் சேர்ந்து இளம்பெண்ணை பிடித்துக் கொண்டு அவரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டனர். அந்த பெண் தப்பிஓட முயன்ற போது இங்கிருந்து ஓட முயன்றால் கொன்று போட்டு விடுவோம் என்று மிரட்டல் விடுத்த 5 பேரும் இளம்பெண்ணை கற்பழித்தனர். பின்னர் அந்த பெண்ணை அங்கேயே விட்டு விட்டு அவர்கள் தப்பி ஓடினர்.

இதையடுத்து முந்திரி தோப்பில் இருந்து நடந்தே வீட்டுக்கு வந்த இளம்பெண் இதுபற்றி தனது உறவினர் ஒருவரிடம் தெரிவித்துள்ளார். அவரது அறிவுறுத்தலின் பேரில் வல்லம் போலீசில் புகார் செய்யப்பட்டது. புகாரை தொடர்ந்து வல்லம் துணை காவல் கண்காணிப்பாளர் பிருந்தா விசாரணை நடத்தினார். அப்போது, இந்த சம்பவம் தொடர்பாக 3 பேரை பிடித்து விசாரித்த போது, அவர்கள் கூட்டு பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து, சம்பவத்தில் ஈடுபட்டதாக கொடியரசன், கண்ணன், சாமிநாதன், சுகுமாரன், தமிழரசன் ஆகிய 5 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். பாதிக்கப்பட்ட இளம்பெண் மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சென்னை ஐஐடியில் மேலும் 11 பேருக்கு கொரோனா மொத்த எண்ணிக்கை 182 ஆக உயர்வு




சென்னை, ஏப்ரல் 29, 2022: சென்னை, ஐஐடி கல்வி நிறுவனத்தில் புதிதாக மேலும் 11 மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 182 ஆக உயர்ந்துள்ளது.

சென்னை ஐஐடியில் தமிழகம் மட்டுமின்றி 15 மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர். விடுதியில் தங்கிப் படிக்கும் ஒரு மாணவருக்கு கடந்த 19ந்தேதி கொரோனா தொற்று ஏற்பட்டது. அதற்கு அடுத்தடுத்த நாள்களில் அந்தப் பாதிப்பு பலருக்கும் பரவியது. இதையடுத்து ஐஐடியில் உள்ள அனைத்து மாணவர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள் என அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பரிசோதனை முடிவுகளின்படி நேற்று வரை 171 பேருக்கு தொற்றுப் பாதிப்பு கண்டறியப்பட்டது.

இந்நிலையில் இன்று மேலும் 11 பேருக்கு தொற்று இருப்பது உறுதியானது. இதன்மூலம் ஐஐடியில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 182 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றால் பாதிக்கப்பட்ட அனைவரையும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## நோய்க்கு சிகிச்சை தீர்வளிக்கலாம் முன்தடுப்பே நோயை முற்றிலும் ஒழிக்கும்

### கட்டுரை ஆசிரியர் - டாக்டர். பிரபு காஞ்சி, சிறுநீரகவியல் துறை ஃபோர்டிஸ் மலர்



சென்னை, ஏப்ரல் 29 2022: ஏப்ரல் 7 - உலக ஆரோக்கிய தினம் அனுசரிக்கப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக பூமி மாசுபடுத்தப்பட்டதால் புற்றுநோய், ஆஸ்துமா, இதய நோய் போன்றவை அதிகரித்துவிட்டன. ஆழமான கடல் முதல் உயரமான மலைப்பகுதி வரை பூமியின் ஒவ்வொரு பகுதியும் மாசுபடுத்தப்பட்டுள்ளது. பதப்படுத்தப்பட்ட, உடல்நலனை ஊக்குவிக்காத உணவு காரணமாக உடல்பருமன், புற்றுநோய், இதய நோய் போன்றவை அதிகரித்துவருகின்றன. தூய்மையான சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தினால் ஆண்டுதோறும் உலகெங்கும் ஏற்படும் 1.30 கோடிக்கு மேற்பட்ட இறப்புகளைத் தடுக்கலாம் என கீபிளி கணித்துள்ளது. 2022 உலக ஆரோக்கிய நாளின் மையக்கரு ‘நம் பூமி, நம் ஆரோக்கியம்’. உலகிலுள்ள அனைவருக்கும் தூய்மையான காற்று, தண்ணீர், உணவு கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது இந்த மையக்கரு.

தடுப்பூசித் திட்டம் போன்றவற்றின் மூலம் தொற்றும் நோய்களைத் தடுப்பதில் நாம் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். அதே நேரம், அதிகம் கவனம் செலுத்தப்படாத பகுதி தொற்றாத நோய்கள் குறித்ததே. சர்க்கரை நோய், உயர் ரத்தஅழுத்தம், ஸ்டிரோக், இதய நோய், நுரையீரல் நோய், சிறுநீரக நோய் போன்றவற்றின் காரணமாக இந்தியாவில் லட்சக்கணக்கானவர்கள் இறந்துவருகிறார்கள். இந்தியாவில் 7.29 கோடி வயதுவந்த சர்க்கரை நோயாளிகள் இருக்கிறார்கள். 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் நகர்ப்புறத்தில் சர்க்கரை நோயாளிகள் சதவீதம் 10.9% முதல் 14.2% வரையிலும், கிராமப்புறப் பகுதிகளில் சர்க்கரை நோயாளிகள் சதவீதம் 3.0 முதல் 7.8% வரையிலும் உள்ளது. 50 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே இது மேலும் அதிகரித்துக் காணப்படுகிறது. (INDIAB Study- 2019).

இந்தியாவில் உயர் ரத்தஅழுத்த நோயாளிகள் சதவீதம் 29.8%. உயர் ரத்த அழுத்த நோயாளிகள் நகர்ப்புறத்தில் 27.6% ஆகவும், கிராமப்புறத்தில் 33.8% ஆகவும் இருக்கிறார்கள். இந்த இரண்டு நோய்களும் இறப்பு விகிதத்தை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துவருகின்றன. இந்த இரண்டு நோய்களின் விளைவாக இதய நோய், ஸ்டிரோக், சிறுநீரக நோய் போன்றவை தீவிரமடைந்து நோயாளிகள் இறக்கிறார்கள். சர்வதேச சிறுநீரக சங்கத்தின் சிறுநீரக நோய் தகவல் மையம் நடத்திய ஆய்வின்படி, நாள்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 17% இருக்கின்றன. இந்தியாவில் நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோய் அதிகரிப்பதில் சர்க்கரை நோயும் உயர் ரத்தஅழுத்தமும் 40% முதல் 50% பங்கு வகிக்கின்றன.

நாள்பட்ட சிறுநீரக நோய்களைத் தடுப்பது குறித்து கவனம் செலுத்தும்போது, நாள்பட்ட சிறுநீரக நோய் கடைசி நிலையை எட்டிவிடும்போது, அதற்கு சிகிச்சை அளிக்கும் செலவும் அதிகரித்துவிடும். கடைசி நிலை ஏற்பட்டுவிட்டால், நோய் தீவிரமடையவும் இறப்பதற்கான வாய்ப்பும் அதிகம். இதன் காரணமாக குடும்பப் பொருளாதாரம் அழியும். இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில், சிறுநீரக நோயைத் தடுப்பதே நீண்ட கால நலனுக்கு நல்லது.

சர்க்கரை நோய், உயர் ரத்தஅழுத்தம், நாள்பட்ட சிறுநீரக நோய் போன்றவற்றுக்கு தொடர்ச்சியான நீண்ட கால சிகிச்சை தேவைப்படும். முன்கூட்டியே நோயைக் கண்டறிதல், நிலைத்த, கவனம் மிகுந்த சிகிச்சை மூலம் சர்க்கரை நோயையும் உயர் ரத்த அழுத்தத்தையும் நீண்ட நாளுக்கு கட்டுப்பாடான நிலையில் பராமரிக்க வேண்டும். அப்போது இதய நோய், ஸ்டிரோக், நாள்பட்ட சிறுநீரக நோய் போன்ற மோசமான பிரச்சினைகளைத் தடுக்கலாம். இந்த நிலையை எட்டுவதற்கு, தடுப்பூசித் திட்டத்தைப் போன்று அடிமட்ட அளவில் செயல்படக்கூடிய புதிய திட்டங்களை வகுக்க வேண்டும்.

தொற்றாத நோய்கள் குறித்த விழிப்புணர்வும், நோய்களுக்கு இணங்கிச் செயல்படாமல் இருப்பதும் பொதுமக்களிடையே பரவலாக இருக்கிறது. நீண்ட காலத்தில் உயிரைக் காப்பதற்கு டயாலிசிஸ் போன்ற முறைகளுக்காக அதிக பணத்தைச் செலவழித்தாலும், அவற்றால் குறைந்தபட்ச பலனையே தர முடிகிறது. எனவே, இந்த நோய்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே அதிகம் பரப்ப வேண்டிய தேவை இருக்கிறது.

‘ஒருவருடைய வாழ்க்கையில் ஆரோக்கியம் என்பது ஒரு வரம் என்பதை ஒரு நோயாளியால் மட்டுமே உணர முடியும்‘ என்பார்கள். இந்த உலக ஆரோக்கிய நாளில், அனைவருக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், மருந்துகளால் நோய்களுக்குப் பிற்காலத்தில் சிகிச்சை அளிப்பதைவிட, உடலை ஆரோக்கியமாகப் பராமரித்து நோய்களை முன்கூட்டியே தடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்துவதுதான் நல்லது. நோய்களைத் தடுக்கும் பல்வேறு பரிசோதனைகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் செய்துகொள்வதன் மூலம் நாம் முதுமையடையும்போது நோய்களைத் தள்ளிவைக்கலாம். நம் நாட்டின் முதுகெலும்பான இளைஞர்கள் புகைபிடித்தல், மது குடித்தல் உள்ளிட்ட தவறான பழக்கங்களை வைத்துக்கொள்ளக் கூடாது. இளம் வயதில் அவை சிலிர்ப்பைத் தரலாம். ஆனால் உடலுக்குள் செல்களையும் உள்ளுறுப்புகளையும் அவை பலவீனப்படுத்துகின்றன. இதை நீங்கள் உணரும்போது, பல கட்டங்களைக் கடந்து மீள முடியாத நோய் நிலைக்குச் சென்றிருப்பீர்கள். சில ஆலோசனைகள்:

- ஆரோக்கிய வாழ்க்கைக்குஞ் (தூய தண்ணீரை குடியுங்கள், இயற்கையான - ஆரோக்கியமான உணவை உண்ணுங்கள், உடற்பயிற்சி செய்யுங்கள்)
- நோய்களை அலட்சியப்படுத்தாதீர்கள் (ஆண்டுதோறும் ரத்த சர்க்கரை அளவு, உயர் ரத்த அழுத்த பரிசோதனைகளை மேற்கொள்ளுங்கள்)
- உங்களுக்கு தொற்றாத நோய்கள் இருந்தால், உங்கள் மருத்துவர் நிறுத்தச் சொல்லும்வரை மருந்துகளை உட்கொள்ளுங்கள்.
- ஆரோக்கியமான மக்களே வலுவான நாட்டை உருவாக்குகிறார்கள், தூய்மையான நபரே தூய்மையான உலகை உருவாக்குகிறார்.

## டாடா மோட்டார்ஸ் சென்னையில் ஒரே நாளில் 101 ஈவிகளை டெலிவரி செய்துள்ளது

### சுத்தமான மற்றும் பசுமையான சுற்றுச்சூழலுக்கான அரசின் கண்ணோட்டத்தை ஆதரிக்கிறது



பாண்டிச்சேரி, ஏப்ரல் 29, 2022: இந்தியாவின் முன்னணி ஆட்டோமொபைல் நிறுவனமான டாடா மோட்டார்ஸ், சென்னையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு ஸ்ரீலக்ஷ்மி ஆட்டோ எண்டர்பிரைசஸ் மூலம் 101 ஈவி களை (70 நெக்ஸன் ஈவி கள் மற்றும் 31 டிகர் ஈவிகள்) இன்று நடைபெற்றதொரு விழாவில் வழங்கியுள்ளது. தமிழகத்தில் ஒரே நாளில் அதிக மின்சார வாகனம் டெலிவரி செய்யப்பட்ட நிகழ்வாக இது திகழ்கிறது.

எப் ஒய் 22 இல் 87% சந்தைப் பங்கைக் கொண்டுள்ளதோடு, இன்றுவரை 23,000 டாடா ஈவிகள் சாலையில் இயங்கி வருவதால், டாடா மோட்டார்ஸ் நாட்டில் மின்சார இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் முன்னணிப் பங்கு வகிக்கிறது. ஈவி-களை அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்றும் முயற்சியில், டாடா மோட்டார்ஸ், டாடா பவர், டாடா கெமிக்கல்ஸ், டாடா ஆட்டோ பாகங்கள், டாடா மோட்டார்ஸ் ஃபைனான்ஸ் மற்றும் குரோமா உள்ளிட்ட பிற டாடா குழும நிறுவனங்களுடன் நெருக்கமாக இணைந்து இந்தியாவில் ஈவிகள் வேகமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பங்களிக்கிறது. அதன் ஈவி சூழல் அமைப்பு " Tata uniEVerse" என்று அழைக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய டாடா மோட்டார்ஸ் பயணியர் வாகனங்கள் வலையமைப்பு மேம்பாடு மற்றும் ஈவி விற்பனைப் பிரிவின் மூத்த பொது மேலாளர் திரு.ரமேஷ் துரைராஜன் அவர்கள் "பசுமை இயக்கத்தை வேகமாக ஏற்றுக்கொள்வது மகிழ்ச்சி அளிக்கிறது. இ-மொபிலிட்டி இயக்கத்தில் இணைவதில் பெருமிதம் கொள்கிறோம், சிறந்த நோக்கத்திற்காக சேவை செய்கிறோம். டாடா மோட்டார்ஸ் தொடர்ந்து இந்தியாவில் மின்சார இயக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவி வருகிறது, மேலும் தேசத்தை #EvolveToElectric க்கு அணிதிரட்டும்போது அதிகமான மக்கள் இந்த பசுமை அலையில் சேருவார்கள் என்று நம்புகிறோம்." என்று கூறினார்

நெக்ஸான் ஈவி, ஒரு துடிப்பான எஸ் யூ வி ஆகும். இதைப் பூஜ்ஜிய உமிழ்வுகளுடன் ஒரு முறை சார்ஜ் செய்தால், கவலையற்ற நீண்ட தூரத்தை (ஏ ஆர் ஏ ஐ சான்றளிக்கப்பட்ட 312 கிமீ தூரம்) வழங்குகிறது. இது ஒரு சக்திவாய்ந்த மற்றும் உயர்-செயல்திறன் 129 பி எஸ் நிரந்தர-காந்த ஏசி மோட்டாரைக் கொண்டுள்ளது, அதிக திறன் கொண்ட 30.2 கி வா எச் லித்தியம்-அயன் பேட்டரி மூலம் இயக்கப்படுகிறது. நெக்ஸான் ஈவி தொழில்துறையில் சிறந்த தூசி மற்றும் நீர்ப்புகா பேட்டரி பேக்குடன் வருகிறது, இது ஐபி67 தரநிலைகளை பூர்த்தி செய்கிறது. மேலும், தொலைநிலை கட்டளைகள், வாகன கண்காணிப்பு முதல் ஓட்டுநர் நடத்தை பகுப்பாய்வு, வழிசெலுத்தல் மற்றும் தொலைநிலை கண்டறிதல் வரையிலான 35 மொபைல் ஆப்ஸ் சார்ந்த இணைக்கப்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.

4 நட்சத்திர ஜி-என்காப் மதிப்பீட்டில், டிகர் ஈவி சந்தேகத்திற்கு இடமின்றி இந்தியாவின் பாதுகாப்பான மின்சார செடான் ஆகும். 3 முக்கிய தயாரிப்பு அம்சங்களின் அடிப்படையில், அதாவது: தொழில்நுட்பம், சொகுசு மற்றும் பாதுகாப்பு, இது ஒரு சிறந்த பவர்டிரெய்ன், இன்ஃபோடெயின்மென்ட் மற்றும் இணைக்கப்பட்ட அமைப்புகளுடன் நிரம்பியுள்ளது, அனைவருக்கும் புதிய வரையறைகளை அமைக்கிறது. ஏ ஆர் அ ஐ சான்றளிக்கப்பட்ட 306 கி மீ வரம்பை வழங்கும், டிகர் ஈவி ஆனது 26-கி வா எச் உயர் ஆற்றல் அடர்த்தி கொண்ட லித்தியம்-அயன் பேட்டரி பேக்குடன் பொருத்தப்பட்டுள்ளது மற்றும் 55 கி வா இன் உச்ச ஆற்றல் வெளியீடு மற்றும் 170 என் எம் உச்ச முறுக்கு மற்றும் 5.7 வினாடிகளில் மணிக்கு 0 முதல் 60 கிமீ வரை செல்லும் ஆற்றல் அனைத்து பயணிகளுக்கும் ஒரு ஜிப்பி மற்றும் உற்சாகமான இயக்கத்தை விளைவிக்கும். ஜிப்ட்ரான் தொழில்நுட்பமானது ஆற்றல்-திறனுள்ள மோட்டார் மூலம் உயர் செயல்திறனை வழங்குகிறது, இது 'ஜிப்பி' ஓட்டுநர் அனுபவத்திற்கு வழிவகுக்கும். டிகர் ஈவி ஆனது 8 ஆண்டுகள் மற்றும் 160,000 கிமீ பேட்டரி மற்றும் மோட்டார் உத்தரவாதத்துடன் முழு மன அமைதியை வழங்கிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No. 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# டிவிஎஸ் மோட்டார் கம்பெனி பெட்ரோனாஸ் உடன் இணைந்து பெட்ரோனாஸ் டிவிஎஸ் ரேஸிங் டீம் உருவாக்கப்பட்டுள்ளது!



சென்னை, ஏப்ரல் 29 2022: இரு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்களை உலகளவில் உற்பத்தி செய்து புகழ் பெற்றுத் திகழும் டிவிஎஸ் மோட்டார் கம்பெனி, பெட்ரோனாஸ் உடன் ஒரு கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது; இதனால், வளர்ந்துவரும் ஆற்றல் நிறுவனமான பெட்ரோனாஸ் இந்தியாவின் முதல் ஃபேக்டரி ரேசிங் குழு எனும் பெருமை பெற்ற டிவிஎஸ் ரேஸிங்கின் டைட்டில் பார்ட்னர் ஆகியுள்ளது.

இந்த சீசனில், புதிதாகப் பெயர் மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கும் பெட்ரோனாஸ் டிவிஎஸ் ரேஸிங் டீமுக்கு தனது அதிகத்திறன் வாய்ந்த என்ஜின் ஆயிலான பெட்ரோனாஸ் ஸ்பிரிண்டாவை விநியோகிக்கவுள்ளது பெட்ரோனாஸ். இந்திய தேசிய மோட்டார்சைக்கிள் ரேஸிங் சாம்பியன்ஷிப், இந்திய தேசிய சூப்பர்கிராஸ் சாம்பியன்ஷிப் மற்றும் இந்திய தேசிய ரேலி சாம்பியன்ஷிப் உள்ளிட்ட உள்ளூர் அளவிலான அனைத்து சாலை பந்தயம், சூப்பர்கிராஸ், ரேலி வடிவ பந்தயங்களில் இக்குழு பங்கேற்கவுள்ளது.

அது மட்டுமல்லாமல், டிவிஎஸ் மோட்டார் கம்பெனி உடன் வர்த்தகச் செயல்பாடு சார்ந்த கூட்டுறவையும் மேற்கொண்டுள்ளது பெட்ரோனாஸ் லூப்ரிகேண்ட்ஸ் இண்டர்நேஷனல்; இதன் மூலமாக இவ்விரு பிராண்ட்களின் கூட்டு தயாரிப்பான பெட்ரோனாஸ் டிவிஎஸ் ட்ரூ4 ரேஸ்ப்ரோ எனும் எண்ணெய் வரும் 2022 மே மாதம் முதல் இந்தியா முழுவதுமுள்ள வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கவிருக்கிறது. இது குறித்து டிவிஎஸ் மோட்டார் கம்பெனியின் தலைமை நிர்வாக அலுவலர் திரு. கே.என்.ராதாகிருஷ்ணன் பேசுகையில், "டிவிஎஸ் ரேஸிங்கில் எங்களது கூட்டுநிறுவனமாக பெட்ரோனாஸ் இணைந்ததில் பெருமகிழ்ச்சியடைகிறோம். முக்கியமான ரேஸிங் நிகழ்வுகளில் பெட்ரோனாஸின் பல்வேறு மேம்பாடுமிக்க தொழில்நுட்பத் தீர்வுகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. மோட்டார் விளையாட்டுகளில் பெட்ரோனாஸின் உலகளாவிய நிபுணத்துவமும் வலுவான செயல்பாடுகளும், டிவிஎஸ் ரேஸிங் அணியின் நாற்பதாண்டு கால வலுவான பாரம்பரியம் உடன் இணைந்து புதிய உயரங்களைத் தொடுமென்று நம்புகிறேன்" எனத் தெரிவித்தார்.

இந்த கூட்டு செயல்பாடு குறித்து டவுன்ஸ்ட்ரீம் பெட்ரோனாஸின் நிர்வாக துணைத் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர் திரு.டடுக் சஸாலி ஹம்ஸா பேசுகையில், "இந்தியா முழுவதும் தனது மதிப்பை மக்களிடையே மேலும் மதிப்புமிக்கதாக உருவாக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது பெட்ரோனாஸ். இந்தியன் ஆயில் பெட்ரோனாஸ் பிரைவேட் லிமிடெட் மூலமாக எல்பிஜி விநியோகிப்பது, ஆம்ப்ளஸ் எனர்ஜி மூலமாக சூரிய மேற்கூரை தகடுகளை வழங்குவது போன்றவை இதன் விரிவாக்க நடவடிக்கைகளுக்கான உதாரணங்கள். இன்று, இந்தியாவின் மிகப் புகழ்பெற்ற அசல் உபகரண உற்பத்தியாளரான டிவிஎஸ் மோட்டார் கம்பெனி உடன் இணைந்து வலுவான கூட்டு செயல்பாட்டை மேற்கொண்டு பெட்ரோனாஸ் டிவிஎஸ் ரேஸிங் டீமை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். உலகளவிலான மோட்டார் விளையாட்டுப் போட்டிகளில் பல சாதனைகளைச் சொந்தமாக்கியிருக்கும் பெட்ரோனாஸ் லூப்ரிகேண்ட்ஸ், டிவிஎஸ் ரேஸிங்கின் லட்சியங்களுக்கு துணை நிற்பதில் பெருமை கொள்கிறது" என்று தெரிவித்தார். தற்போதைய மேம்பாடுகள் பற்றி டிவிஎஸ் மோட்டார் கம்பெனியின் புதிய தயாரிப்பு மேம்பாட்டுப் பிரிவின் துணைத் தலைவர் திரு.மேகஷ்யாம் எல் டிக்கோலே பேசுகையில், "கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாக இந்திய மோட்டார் விளையாட்டுகளில் முக்கிய சக்தியாக விளங்குகிறது டிவிஎஸ் ரேஸிங். நம் நாட்டில் மோட்டார் ரேஸிங் மீதான ஆர்வமும் உத்வேகமும் வளர்வதற்காகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்; அதோடு ஆழமான பிணைப்பைக் கொண்டிருக்கிறோம். பெட்ரோனாஸ் உடனான எங்களது கூட்டுச் செயல்பாட்டின் சான்றாக, டிவிஎஸ் ரேஸிங் டீமின் பெயரை மாற்றி பெட்ரோனாஸ் டிவிஎஸ் ரேஸிங் டீம்



என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்" என்று தெரிவித்தார். பெட்ரோனாஸின் குழும செயல்பாட்டு தொடர்புகள் பிரிவு மூத்த பொது மேலாளரான ததின் அனிதா அப்துல் ஆசிஸ் பேசுகையில், "உலகளாவிய மோட்டார் விளையாட்டு நிகழ்ச்சிகளின் மூலமாக, சாலையிலும் பந்தயப்பாதையிலும் திரவ தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குவதில் தொடர்ச்சியாகப் புதுமைகளை மேற்கொண்டு வருகிறது பெட்ரோனாஸ்; டிவிஎஸ் ரேஸிங் டீம் உடன் கூட்டுச் செயல்பாட்டை மேற்கொள்வதிலும் எங்களது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் பெருமைப்படுகிறோம். இது, எங்களுக்கு மாபெரும் உத்வேகத்தைத் தந்துள்ளது. எங்களது திறன்களைச் சோதனை செய்வதற்கான மற்றுமொரு தளத்தை இது வழங்கியிருக்கிறது, இந்தியாவில் மோட்டார் விளையாட்டு ரசிகர்கள் மற்றும் வர்த்தககத்திற்கான ஒரு செயல்பாட்டு சந்தை தொடர்பான பெட்ரோனாஸ் பிராண்டின் நோக்கம் குறித்த விழிப்புணர்வை உருவாக்கியிருக்கிறது" என்று தெரிவித்தார். பெட்ரோனாஸ் லூப்ரிகேண்ட்ஸ் இண்டர்நேஷனலின் மண்டல நிர்வாக இயக்குனர் திரு.ஜோசப்பி பெட்ரோ பேசுகையில், "பெட்ரோனாஸ் டிவிஎஸ் ரேஸிங் டீம் பயன்படுத்தும் அதே பிரீமியம் சேர்க்கை தொழில்நுட்பத்துடன் பெட்ரோனாஸ் டிவிஎஸ் ட்ரூ4 ரேஸ் ப்ரோ என்ஜின் ஆயிலை வடிவமைத்திருக்கிறோம். இதனால், அதே போன்ற சிறப்பான செயல்பாட்டை டிவிஎஸ் வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனங்களிலும் பெறலாம்" என்று தெரிவித்தார்.

'பந்தயப்பாதையில் இருந்து சாலைக்கு' எனும் நிறுவனத்தின் உத்தி மூலமாக, டிவிஎஸ் அபாச்சே சீரிஸின் பொறியியலில் முக்கியமானதாக விளங்குகிறது டிவிஎஸ் ரேஸிங். ரேஸ் திறனில் கவனம் செலுத்துவதன் வழியாக இவ்விளையாட்டுப் பிரிவை மறுவரையறை செய்துள்ளது இந்த பிராண்ட்; அதோடு விளையாட்டு ஆர்வலர்களுக்கு அதிக ஆசைமிக்க வாகனமாகவும் ஆகியுள்ளது. இதனால், 150சிசி-க்கு அதிகமான பிரிவில் வேகமாக வளர்ச்சியை எதிர்கொண்டு வருகிறது டிவிஎஸ் அபாச்சே. நாட்டின் மோட்டார் வாகன விளையாட்டுகளில் முன்னோடியாக விளங்கும் டிவிஎஸ் ரேஸிங், இந்தியாவில் இந்த சீரிஸை அறிமுகப்படுத்திய முதலாவது இந்திய உற்பத்தி நிறுவனமாகும். இந்த கூட்டுச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக பெட்ரோனாஸ் டிவிஎஸ் ரேஸிங் டீம் வாகனங்களின் தோற்றம் இதுவரையில் இல்லாத வகையில் முற்றிலுமாக மாறும். இந்திய தேசிய மோட்டார்சைக்கிள் ரேஸிங் சாம்பியன்ஷிப், இந்திய தேசிய சூப்பர்கிராஸ் சாம்பியன்ஷிப் மற்றும் இந்திய தேசிய ரேலி சாம்பியன்ஷிப் உள்ளிட்ட உள்ளூர் அளவிலான அனைத்து சாலை பந்தய, சூப்பர்கிராஸ், ரேலி வடிவங்களிலும் இக்குழு பங்கேற்கவுள்ளது. பெட்ரோனாஸ் லூப்ரிகேண்ட்ஸ் இண்டர்நேஷனல்; இதன் மூலமாக இவ்விரு பிராண்ட்களின் கூட்டு செயல்பாடு வர்த்தகம் சார்ந்த கூட்டுச்செயல்பாடாகவும் இருக்கும் என்பதற்குச் சான்றான பெட்ரோனாஸ் டிவிஎஸ் ட்ரூ4 ரேஸ்ப்ரோ கோ-பிராண்ட்ட் ஆயில் இந்தியச் சந்தைகளில் கிடைக்கவிருக்கிறது.

# ஹிந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி அன்ட் சயின்ஸ் (HITS), HITS ஆன்லைன் பொறியியல் நுழைவுத் தேர்வு & HITSEEE 2022 & HITSCAT 2022 க்கான தேதிகளை அறிவித்தது.

**10 பள்ளிகள், தொழில்துறை சார்ந்த 100 க்கும் மேற்பட்ட படிப்புகள் மற்றும் மாற்றக்கூடிய பாடத்திட்டத்துடன் ஆட்-ஆன் ஹானர்ஸ் மற்றும் மைனர்ஸ் சான்றிதழுடன் வழங்குகின்றன**

சென்னை, ஏப்ரல் 27 2022: ஹிந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி அன்ட் சயின்ஸ் (HITS) தனது ஆன்லைன் பொறியியல் தேர்வுக்கான தேதிகளை அறிவித்துள்ளது. - HITSEEE 2022 & லிபரல் ஆர்ட்ஸ் & அலைடு சயின்ஸ், ஸ்கூல் ஆஃப் லா மற்றும் பிற பாடத்திட்டங்களுக்கான ஆன்லைன் நுழைவுத் தேர்வு- HITSCAT 2022. ஆன்லைன் பொறியியல் நுழைவுத் தேர்வுகள் 2022-2023 கல்வியாண்டில் நடைபெற உள்ளன. ஆன்லைன் நுழைவுத் தேர்வு இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது. முதல் கட்டம் 25 மே 2022 முதல் 30 மே 2022 வரை நடைபெறும். இரண்டாம் கட்டம் 16 ஜூன் 2022 முதல் 18 ஜூன் 2022 வரை நடைபெறும். மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளம் – apply.hindustanuniv.ac.in மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். முதல் கட்ட தேர்வுக்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 23 மே 2022 மற்றும் 2 ஆம் கட்ட தேர்வுக்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 12 ஜூன் 2022 ஆகும். முடிவுகள் ஜூன் 20, 2022 அன்று அறிவிக்கப்படும். கவுன்சிலிங் 24 ஜூன் 2022 முதல் 30 ஜூன் 2022 வரை நடைபெறும்..



1985 இல் தொடங்கப்பட்ட இந்துஸ்தான் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் நிறுவனம் (HITS), தற்போது பல்கலைக்கழகமாக பொறியியல், தொழில்நுட்பம், மேலாண்மை, கட்டிடக்கலை, லிபரல் ஆர்ட்ஸ், பயன்பாட்டு அறிவியல், வடிவமைப்பு, சுகாதார அறிவியல் மற்றும் சட்டம் போன்ற பல்வேறு துறைகளில் இளங்கலை படிப்புகள், முதுகலை படிப்புகள், டிப்ளோமா படிப்புகள், ஆராய்ச்சி மற்றும் முனைவர் படிப்புகளை வழங்குகிறது. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து 18,000 க்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்யும் புகழ்பெற்ற இந்துஸ்தான் குழும நிறுவனங்களின் ஒரு பகுதியாக இந்த நிறுவனம் உள்ளது.

HITS 10 பள்ளிகளில் தொழில் சம்பந்தப்பட்ட மற்றும் மாற்றக்கூடிய பாடத்திட்டத்துடன் 100 க்கும் மேற்பட்ட படிப்புகளை ஆட்-ஆன் ஹானர்ஸ் மற்றும் மைனர்ஸ் சான்றிதழுடன் வழங்குகிறது. இந்த நிறுவனம் தொழில்துறை 4.0 ஆயத்த படிப்புகள், மற்றும் கிளீன் எனர்ஜி, சைபர் பாதுகாப்பு, ஏவியனிக்ஸ், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர வழி கற்றல் போன்ற சிறப்பு படிப்புகளில் பொறியியல் பட்டப்படிப்புகளில் கவனம் செலுத்துகிறது. இந்த வளர்ந்து வரும் தொழில்நுட்ப அரங்குகளால் உருவாக்கப்பட்ட திறமையான பணியாளர்களின் மூலம் வளர்ந்து வரும் தேவையின் இடைவெளியை குறைக்கிறது.

கூடுதலாக, HITS ஆனது திட்ட அடிப்படையிலான கற்றலை அதன் தத்துவமாக அனைத்து படிப்புகளிலும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது மாணவர்களுக்கு அடிப்படைகளை நன்றாக புரிந்துகொள்ள உதவுவது மட்டுமல்லாமல், நவீன தொழில்களுக்கு தேவைப்படும் அதிநவீன தொழில்நுட்பங்களை வெளிப்படுத்துவதன் மூலம் கட்டமைக்கப்பட்ட கற்றல் சூழலுக்குள் ஆராய்ச்சிக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையையும் வழங்கும். ஹிந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி அன்ட் சயின்ஸ், மாணவர்களுக்கான டாக்டர் கே.சி.ஜி.வர்கீஸ் ஸ்காலர்ஷிப் திட்டங்களையும் நிறுவியுள்ளது. இது மூன்று வகைகளின் கீழ் வழங்கப்படுகிறது: 1) மெரிட் ஸ்காலர்ஷிப் - கல்விக் கட்டண தள்ளுபடி திட்டம் – HITSEEE மற்றும் HITSCAT பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் மதிப்பெண்களின் அடிப்படையில் வழங்கப்படும். 2) மெரிட் கம் மீன்ஸ் ஸ்காலர்ஷிப் - பொருளாதாரத்தில் நலிவடைந்த/உடல்நலம் பாதிக்கப்பட்ட/முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் மற்றும் பாதுகாப்பில் பணியாற்றும் திறமையுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. 3) விளையாட்டு மற்றும் கலாச்சார உதவித்தொகை - மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டு மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் சிறந்த செயல்திறன் கொண்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் (NAAC), அரசாங்கத்தால் "கி" கிரேடு அங்கீகாரம் பெற்ற பெருமை HITSக்கு உண்டு. 3.3/4.0 மதிப்பெண்களை பெற்ற இந்தியாவின் மற்றும் அரசாங்கத்தின் பல சலுகைகள் கொண்ட ஒரு வகை 2 நிறுவனமாகும். தேசிய அங்கீகார வாரியம் (NBA) பல்கலைக்கழகத்தின் பல பி.டெக் திட்டங்களை அங்கீகரித்துள்ளது. HITS ஆனது QS I - Gauge E Lead for E - கற்றல் சிறந்த கல்வி டிஜிட்டல் மயமாக்கலுடன் சான்றிதழ் பெற்றுள்ளது. டைம்ஸ் உயர்கல்வி உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் HITS ஆனது நிலையான வளர்ச்சி இலக்கில் சிறந்த நிறுவனங்களில் தரவரிசைப்படுத்தப்பட்டது. எஜுகேஷன் வேர்ல்ட் இதழ் 2020 -21 தனியார் பொறியியல் தரவரிசையில் அகில இந்திய அளவில் 10வது இடத்தை HITS பிடித்துள்ளது. இந்திய அரசாங்கத்தின் MHRD ஆல் HTBI - HEIC மூலம் மேற்கொள்ளப்படும் கண்டுபிடிப்பு செல் செயல்பாடுகளை நிறுவியதற்காக HITS க்கு 5 ஸ்டார் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் இது ஒரு முன்முயற்சியான அடல் புத்தாக்க சாதனைகளுக்கான நிறுவனங்களின் தரவரிசையில் (ARIIA) தனியார் பல்கலைக்கழகங்களின் பிரிவில் அகில இந்திய அளவில் 25வது இடத்தை பெற்றுள்ளது. இது இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சகத்தின் முயற்சியாகும். இந்தியாவில் உள்ள அனைத்து முக்கிய உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே "புதுமை மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு" தொடர்பான குறிகாட்டிகளில் இந்தியா முறையாக வரிசைப்படுத்துகிறது. ஊரடங்கின் போது (4359 பங்கேற்பாளர்கள் 2, 20,745 பாடங்களை முடித்துள்ளனர்) இன்டர்நேஷனல் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸால் வழங்கப்பட்ட/கற்பிக்கப்படும் அதிக எண்ணிக்கையிலான ஆன்லைன் படிப்புகளுக்கான உலக சாதனையை சமீபத்தில் HITS பெற்றது.

# இந்தியாவின் பொருளாதாரம் மகத்தான ஊக்கமளிக்கிறது, கோவிட்-ஐ மீள்தன்மையுடன் எதிர்த்து போராடுகிறது: இந்திய பொருளாதார மாநாடு 2022 இல் வெளியுறவுத்துறை செயலாளர் ஷ்ரிங்லா

சென்னை, ஏப்ரல் 29 2022: கோவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்ட இடையூறுகள் இருந்தபோதிலும், உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா கடந்த வெள்ளிக்கிழமை கூறினார்.

வெளியுறவுத்துறை செயலாளர் அளித்த பேட்டியில், "நாங்கள் நம்பகமான அரசியல் பங்காளிகளாக மட்டும் பார்க்கப்படாமல், நம்பகமான பொருளாதார பங்காளிகளாகவும் பார்க்கப்படுகிறோம். ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, சட்டத்தின் ஆட்சி, தொழில்முனைவோர் மற்றும் கடின உழைப்பின் தனித்துவமான இந்திய நெறிமுறைகள் ஆகியவற்றுக்கான எங்கள் அர்ப்பணிப்பு பொருளாதார டிவிடெண்டுகளை அளிக்கிறது. பொருளாதாரம் மற்றும் நிதி விஷயங்களுடன் தொடர்புடைய அனைத்து பலதரப்பு உரையாடல்களிலும் நாங்கள் முன்பை விட அதிக முக்கியத்துவம் பெறுகிறோம்."

இந்தியாவின் பொருளாதார கொள்கையை பாராட்டிய ஷ்ரிங்லா, நம் நாட்டுக்கு கிடைக்க இருக்கும் ஜி 20 நாடுகள் குழுவின் தலைவர் பதவியானது, நமது மேம்பட்ட உலகளாவிய நிலைப்பாட்டிற்கான அங்கீகாரம் மற்றும் நமது முன்னோக்குகளை முன்வைப்பதற்கும் நமது முன்னுரிமைகளை முன்னிலைப்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாகும் என்று கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் "ஆத்மநிர்பார் பாரத்" முன்முயற்சியை பாராட்டிய ஷ்ரிங்லா, இது இந்தியாவின் பொருளாதார ராஜதந்திரத்தை மாற்றியமைத்துள்ளது என்று கூறினார். அவர் கூறுகையில், "வெளியுறவு கொள்கை மொழியில் சாதகமான தன்னாட்சியாக மொழிபெயர்க்கும் ஆத்மநிர்பாரின் கருத்து நமது பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ராஜதந்திரத்தை மாற்றுகிறது" என்றார்.

கோவிட்-19 தொற்றுநோயால் முன்வைக்கப்பட்ட சவால்கள் இருந்தபோதிலும், இந்தியா உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இருந்தது என்று ஷ்ரிங்லா கூறினார். அவர் மேலும் கூறுகையில், "அண்டை நாடுகளில் உள்ள தற்போதைய பொருளாதார நிகழ்வுகள், இந்திய பொருளாதாரத்தின் வலிமை மற்றும் பின்னடைவு, கடினமான காலங்களில் பணப்புழக்கம் மற்றும் நிதி ஸ்திரத்தன்மைக்கான ஆதாரமாக அதன் நிலை ஆகிய இரண்டையும் எடுத்துக்காட்டுகின்றன."

வெளியுறவுச் செயலாளரின் கூற்றுப்படி, இந்தியா மீள் மற்றும் நம்பகமான விநியோக சங்கிலிகள் மற்றும் உலகளாவிய மதிப்பு சங்கிலிகளுக்கு மிகவும் முக்கியமான மையமாக மாறும். ஷ்ரிங்லாவின் கூற்றுப்படி, வெளியுறவு கொள்கை மற்றும் வியூக விவகாரங்களால் இந்தியாவின் ஜனநாயக பலன்கள் அதிகரித்து வருகின்றன.

உரையாடலின் போது, வெளிநாட்டு மற்றும் வியூக கொள்கைகள் உலகளாவிய நிகழ்வுகளுக்கு பதிலளிக்கும் வகையில் தொடர்ந்து உருவாகி வருவதாகவும் வெளியுறவுத்துறை செயலாளர் கூறினார். போருக்கு பிந்தைய யதார்த்தங்களை கையாள வடிவமைக்கப்பட்ட அமைப்பு இருபத்தியோராம் நூற்றாண்டின் பிரச்சினைகளை கையாள்வதில் தெளிவாக குறைந்துவிட்டது என்று ஷ்ரிங்லா கூறினார். ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு முயற்சிகளுக்கு இந்தியாவின் பங்களிப்பை அவர் வலியுறுத்தினார். தொற்றுநோயை கையாண்டதில் நாட்டின் அணுகுமுறையையும் அவர் பாராட்டினார்.

# Apollo Hospitals successfully performs a Complex surgery to remove a huge rare recurrent chest wall tumour

Chennai, April 29 2022: A multi-disciplinary team of specialist at Apollo Hospitals Chennai, Asia's largest and most trusted multi-specialty chain of hospitals,performed a remarkable surgery on a 50-year-old Bangladeshi man to remove a rare recurrent chest wall Chondroscarcoma tumour. The tumour was safely removed, and the chest wall was reconstructed using synthetic materials and back muscle tissue. A new chest wall was formed after the sternal bone was repaired with bone cement wrapped in a mesh.

Mr. Abdullah, a 50-year-old Bangladeshi gentleman, reported to Apollo Hospitals in Chennai with a tumour developing from his rib in his chest wall. The tumour began as a swelling in his chest wall in November 2020, and he was assessed and operated on in December 2020 in his hometown of Bangladesh. The tumour was discovered to be a chondrosarcoma, which is a cancerous tumour that arises from the cartilage that joins the rib to the spine.

The surgeon in Bangladesh, has removed the tumor along with his left first and second rib. Unfortunately, his tumour recurred within 6 months of surgery, in May 2021. It was much larger and growing rapidly this time. Mr.Abdullah decided to seek opinion from higher centers in India as there was no expertise and infrastructure support to




perform such an operation in Bangladesh.

The most effective treatment for chondrosarcoma is surgery, however his tumour in the chest wall was enormous and widespread, involving vital neck structures and huge veins originating from the heart. He was started on chemotherapy at another institute prior to coming to Apollo Hospitals in an attempt to decrease the tumour, despite the fact that it is not standard of treatment. His tumour in the chest wall did not diminish despite chemotherapy and targeted therapy, and it continued to grow in size.

Speaking about the complexity of the disease, Dr. Ajit Pai,Senior Consultant in Surgical Oncology and Robotic Surgery, Apollo Hospitals, Chennai said, "The lesion comprised three components, one each in the neck, chest wall, and inside the chest, squeezing the key structures in the neck, the heart, lungs, and the major vessels. Patientstarted to develop difficulty in breathing, difficulty in swallowing and chest pain. Multiple centers across India were hesitant to offer surgery to him owing to complexity of the lesion and the perceived low probability of success."

He added, "At this juncture, he reported to us and we thoroughly evaluated him. His scans revealed a tumor in the chest wall and neck with involvement of sternum (central chest bone), collar bone, ribs, important vessels in the chest and neck (aorta, carotid and subclavian Vessels) and the wind pipe (trachea)."

Based on a detailed study done by the by team of experts headed by Dr Ajit Pai, Senior Consultant in Surgical Oncology with support from the Dr Rajarajan Venkatesan, Vascular surgeon, Dr MM Yusuf, Cardiothoracic Surgeon, Dr Arun Kannan,Orthopedic Surgeon, Dr Dr. Chepauk Ramesh, Plastic and Reconstructive Surgeon andDr Bhaskar, Cardiac Anesthetist the surgery was planned and performed.

The patient underwent a 14 hour surgery on 25th of February 2022 and his tumor along with part of the sternum, 3 ribs on each side and collar boneswas removed completely. The vital blood vessels were preserved because of careful preoperative planning and meticulous surgery. The chest wall was reconstructed by the plastic and reconstructive surgeon with synthetic materials and tissue from the back muscles. The sternal bone was reconstructed with bone cement encased in a mesh and a new chest wall was created.

Appreciating the team of doctors Ms. Preetha Reddy, Vice Chairperson, Apollo Hospitals group said, "We have always believed that harnessing the right technology and combining it with medical expertisehelp work miracles. This case is one such example, we are happy to be setting high standards in patient care. At Apollo Hospitals, we put the patient first in all we do and deliver world-class treatment that is both accessible and affordable. We are convinced that such medical milestones will alter the lives of many more individuals who are in dire need."

Mr. Abdullah recovered well in the post-operative period without major complications with intensivepost-operative care in the CCU. The Biopsy report confirmed that his Cancerous tumour was removed completely with negative margins and he is currently undergoing radiation therapy which is an adjunct to the surgery. His surgery and uneventful recovery have given him a new lease of life and a prospect of cure, which seemed a remote possibility a few months ago.

# India's Economy Witnesses Massive Boost, Battles COVID in a Resilient Manner: FS Shringla at India Economic Conclave 2022

Chennai, April 29 2022: Despite the disruptions caused by the COVID-19 pandemic, Foreign Secretary Harsh Vardhan Shringla stated on Friday that India is one of the world's fastest-growing economies.

The Foreign Secretary said in an interview, "We are seen not just as reliable political partners but as reliable economic partners. Our commitment to democracy, transparency and the rule of law and the unique Indian ethos of entrepreneurship and hard work is paying an economic dividend. We matter more than ever before in all the multilateral conversations that relate to economic and financial matters."

Shringla, who praised India's economic policy, stated that the country's upcoming presidency of the G20 group is both an acknowledgement of our enhanced global standing and an opportunity to project our perspectives and highlight our priorities.

